# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure.)
------
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous Case No. CC 38/2015
Priliminary Register

Sessions

Deposition of witness for
Prosecution PW1
Defence
Court

Name :Chellamani
Father's Name :Arjunan
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.02.2022.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருமங்கலம் சோழவந்தான் ரோடு பனமரத்து பஸ் ஸ்டாப் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் வனத்துறையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு உறப்பனூர் பிட் 1 சர்வே நம்பர் 136 3எ1, 136.'.2 நஞ்சை நிலம் 25 செண்டும் எங்கள் சித்தப்பா சகாதேவன் என்பவருக்கு 136 2எப், 136.'.2 நஞ்சை நிலம் 28.5செண்டும் உள்ளது. இரண்டும் பேரும் சேர்ந்து இலவச மின்சாரம் பெற்று விவசாயம் செய்வதற்காக என்னிடம் என் சித்தப்பா வேண்டுகோள் விடுத்தார். அப்போது நான் வனத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். எனது சித்தப்பாவின் வேண்டுகோளின்படி இரண்டுபேரும் சேர்ந்து இலவச மின்சாரம் பெற்று இரண்டு போர் போட்டு மோட்டார் ரூம் கட்டி தண்ணீர் பைப் பதித்து ஆளுக்கு ஒரு நாள் தண்ணீர் முறைவைத்து விவசாயம் செய்துவருகிறோம். இதை ஊர்ஜிதம் செய்ய திருமங்கலம் சார்பு ஆய்வாளர் பதிவு அலுவலகத்தில் 2011ல்

ஒப்பந்த ஆவணம் பதிவு செய்துகொண்டோம். மேற்படி விவசாயம் செய்துகொண்டிருந்தபோது 2014ம் வருடம் ஆகஸ்ட் மாதம் வைரமணி என்பவர் எனது அப்பா பெயரில் மின்இணைப்பு இருக்கின்றது எனவே எனக்கு பாத்தியம் இல்லை என்று என்னை விவசாயம் செய்யவிடாமல் தடுத்தார். நான் ஊர் பெரியவர்களிடம் இலவச மின்சாரம் பெற குறைந்தது 50 செண்ட் நிலம் வேண்டும். எனவே நாங்கள் இருவரும் சேர்ந்து எனது சித்தப்பா பெயரில் அவர் வயதில் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் மின்இணைப்பு பெற்று விவசாயம் செய்தோம். ஊர் பெரியவர்களும் வைரமணி ஆகியோருக்கு அறிவுரை சொன்னார்கள். அவர்கள் அறிவுரையை கேட்காமல் மீறி திருமங்கலம் முனிசிப் நீதிமன்றத்தில் ஓஎஸ் 212-2014 என்ற வழக்கினை தொடர்ந்தார். தேதி ஞாபகம் இல்லை வைரமணி, சகாதேவன், வைரமணியின் மனைவி ஆகியோர் சேர்ந்து நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த தண்ணீர் செல்லும் குழாயை உடைத்தார்கள். இது குறித்து நாங்கள் கேட்டபோது எங்கள் இரு தரப்புக்கும் கைகலப்பு ஏற்பட்டு திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கிற்கு முன்ஜாமின் பெறுவதற்காக நாங்கள் ஊருக்கு அருகிலேயே இருந்தோம். 29.09.2014ம் தேதி நான் எனது சொந்த இடத்தில் ஆழ்துழைக்கிணறு அமைத்திருந்தேன். அதை வைரமணி, பிரகாஷ், மோகன், அருவகம், மற்றும் இருவர் சேர்ந்து ஆழ்துழைக்கிணற்றை உடைத்து மேவிக்கொண்டிருந்தார்கள். தகவல் தெரிந்து நான் சென்று கேட்டபோது அவர்கள் நான் அருகில் சென்றால் என்னைத்தாக்குவோம் என்று கையில் ஆயுதத்தை வைத்துக்கொண்டு மிரட்டினார்கள். அங்கு இருந்த இரண்டு பெரியவர்கள் உங்களுக்குள் பிரச்னை வேண்டாம் நீங்கள் காவல் நிலையம் சென்று புகார் அளித்து மேல்நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். இது குறிதது காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். தற்பொழுதுதான் நீங்கள் இருவரும் சண்டை போட்டீர்கள் அதனால் உங்கள் புகாரை எடுக்கமுடியாது என்று காவல் நிலையத்தில் கூறிவிட்டார்கள். இது குறித்து மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எனது புகாரை திருமங்கலம் நகர் காவல் நிலையத்திற்கே அனுப்பிவிட்டார்கள். காவல் நிலையத்தில ் புகார் எடுக்காமல் இருந்ததால் நான் கனம் நீதிமன்றத்தில் தனிநபர் புகார் அளித்தேன். அந்த புகாருக்கு ஆதரவாக நான் இச்சாட்சியத்தை அளிக்கிறேன்.

சேதப்படுத்தப்பட்ட போரின் ஆழ்கிணறு புகைப்படம் மசாஆ 1 ஆகும். மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு அசாஆ 2 அதன் ரசீது மசாஆ 3 ஆகும். அதன் ஒப்புகை அட்டை மசாஆ 4 ஆகும்.

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி இல்லை.**